# ஸ்காட்லாந்தில் வாழ்க்கை

ஏப்ரல் 2011

Life in Scotland - Tamil

HAPPY TO TRANSLATE

ஸ்காட்லாந்தின் புதிய வாழ்க்கை முறைக்கு ஏற்ப மாறுவதற்கு சிறிது காலம் ஆகலாம். இத்துண்டு அறிக்கை ஸ்காட்லாந்தின் வாழ்க்கை முறையை நீங்கள் புரிந்துகொள்ள உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது உங்களுடைய தாய் நாட்டிலிருந்து வேறுபடும் சில பழக்கவழக்கங்கள், நடத்தை, சட்டங்கள் மற்றும் விதிகள் பற்றிய அடிப்படைத் தகவல்களை அளிக்கின்றது.

### சட்டப்படியான வயதுக் கட்டுப்பாடுகள்

18 வயதிற்குப் பிறகு மக்கள் பொதுவாக வயது வந்தவர்களாக அல்லது சட்டப்படியான வயதினராகக் கருதப்படுகின்றனர். ஆயினும், சட்டப்படியான வயது சில நடவடிக்கைகளுக்கு பின்வருமாறு மாறுபடலாம்:

- மது அருந்துதல் - **18 வயது** அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்
- புகைப்பிடித்தல் - **18 வயது** அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்
- ஓட்டுநர் உரிமம் பெறுதல் - **17 வயது** அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்
- கல்வியை கைவிடுதல் - **16 வயது** அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்
- பாலுறவுக்கான சம்மதம் – பாலுறவு வைத்துக் கொள்வதற்கு **16 வயது** அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்

### குழந்தைகள்

- தங்களுடைய பிள்ளைகளுக்கு 18 வயது ஆகும் வரையில் பெற்றோர்களே அவர்களுக்கு பொறுப்பாளர்களாகக் கருதப்படுகின்றனர்
- இளம் பிள்ளைகளை பொது இடங்களிலோ அல்லது வீட்டிலோ கவனிப்பாறின்றி விடக் கூடாது.
- குழந்தைகளைத் தாக்குவதற்கு அல்லது அடிப்பதற்கு அனுமதியில்லை



### புகைப்பிடித்தல்

- இச்சின்னத்தை நீங்கள் பார்க்குமிடங்கள் எதிலும் புகை பிடிப்பதற்கு அனுமதி இல்லை
- உள்ளரங்குகள் அல்லது அலுவலகங்கள், உணவகங்கள், மது அருந்துகம் மற்றும் திரையரங்குகள் உள்ளிட்ட பொது இடங்களில் புகைப்பிடித்தல் அனுமதிக்கப்படுவதில்லை
- தடைவிதிக்கப்பட்ட இடங்களில் புகைப்பிடித்தால் அபராதம் விதிக்கப்படும்.
- உங்களுடைய வீட்டில் அல்லது உங்களுக்கு சொந்தமான வண்டியில் புகைப்பிடிப்பது, வீட்டின் உரிமையாளரால் வேறு வகையில் குறிப்பாகக் கூறாத வரையில் அல்லது வண்டி வியாபார நோக்கத்திற்காக உபயோகப்படுத்தப்படாத வரையில் அனுமதிக்கப்படுகிறது.

**மது அருந்துதல்**

- வீதிகள் அல்லது பூங்காக்கள் போன்ற பொதுவிடங்களில் மது அருந்துதல் கூடாது. அவ்வாறு செய்வது அபராதத்திற்கு வழிவகுக்கும்

**கத்திகள்**

- ஸ்காட்லாந்தில் கத்தியை உடன் கொண்டு செல்வது சட்டவிரோதமானது. நீங்கள் காவலர்களால் தடுத்து நிறுத்தப்படும் வேளையில், நீங்கள் ஒரு கத்தியை எடுத்துப் போய்க்கொண்டிருப்பீர்களானால், அது நீங்கள் கைது செய்யப்படுவதற்கு வழிவகுக்கும்.
- பள்ளிக்கூடங்களில் கத்திகள் அனுமதிக்கப்படுவதில்லை.

**குப்பை போடுதல்**

- தெருக்களை அசுத்தமாக்குதல், குப்பைகளையோ தேவையற்ற பொருட்களையோ தெருவில் போடுதல் ஆகியவை 50 பவுண்டு அபராதத்திற்கு வழிவகுக்கும்.

**பாகுபாடு**

- யாராவது ஒருவரை அவரது வயது, இயலாமை, பாலின மாற்றம், திருமணம் மற்றும் குடிமுறைக் கூட்டாண்மை, கர்ப்பம் மற்றும் மகப்பேறு, இனம், மதம் மற்றும் நம்பிக்கை, பாலினம் அல்லது பாலுறவு முறை காரணமாக பாகுபடுத்தி நடப்பது அல்லது நடத்துவது அல்லது அவர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவது சட்டவிரோதமானதாகும்.
- தொல்லை கொடுப்பது சட்டவிரோதமானதாகும், மேலும் இது சட்ட நடவடிக்கைக்கு இட்டுச் செல்லும்.
- நீங்கள் வாய்வழியாகவோ அல்லது உடல்சார்ந்தோ தொல்லைப்படுத்தப்பட்டதாக உணர்ந்தால், காவல்துறையை அணுக வேண்டும். நீங்கள் மேலும் ஸ்காட்லாந்திய அகதிகள் மன்றத்தில் யாருடனாவது பேசியோ அல்லது சமூகவிரோத நடத்தை சிறப்புப் படையினரைத் தொடர்பு கொண்டோ உதவி பெறலாம்.

**பெண்களுக்கு எதிரான வன்முறை**

- பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது வீட்டில் கடுமையாக நடந்துகொள்ளுதல், கற்பழிப்பு, பாலியல் பலாத்காரம், விபச்சாரம், பாலியல்ரீதியான சுரண்டல் மற்றும் கடத்துதல், குழந்தைகளிடம் தகாத பாலியற்கொடுமை, பெண்ணுறுப்புகள் சிதைக்கப்படுவது (FGM), கட்டாயத் திருமணம் மற்றும் கௌரவத்திற்காக வன்முறை ஆகியவற்றை உள்ளடக்கியது.
- ஸ்காட்லாந்தில் உள்ள அனைத்து பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு, பெண்களுக்கு எதிரான யாதொரு வடிவத்திலும் வன்முறைக்கு ஆளாவதை எதிர்க்கும் சட்ட உரிமை உண்டு.
- குடும்பம்சார் இழிவு என்பது உடலியல் இழிவு, பாலியல் இழிவு, உளவியல் இழிவு மற்றும் பணம்சார்ந்த இழிவு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- எந்த வடிவத்திலும் வன்முறையையோ அல்லது குடும்பதம்சார் இழிவோ யார் ஒருவர் அனுபவித்தாலும் அவருக்கு நம்பகமான உதவி மற்றும் ஆதரவு உண்டு.

உதவி மற்றும் அறிவுரை கீழ்க்காணும் நிறுவனங்களிலிருந்து கிடைக்கிறது:

- ஸ்காட்லாந்து மகளிருக்காக உதவிடும் குடும்பம்சார் இழிவு இலவச தொலைபேசி இணைப்பு : 0800 027 1234 (24மணிநேரங்கள்)
- தேசிய வன்புணர்வு மற்றும் பாலியல்ரீதியான தாக்குதல் உதவியழைப்பு எண்: 08088 01 03 02
- ஆர்ச்வே க்ளாஸ்கோ: 0141 211 8175

**பழக்கவழக்கங்களில் மாறுபாடுகள் மற்றும் ஏற்கத்தக்க நடத்தை**

சில நடத்தைகள் சட்டத்தின்கீழ் வராவிட்டாலும், ஸ்காட்லாந்தின் பழக்கவழக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் உங்களது தாய்நாட்டிலிருந்து மாறுபடக்கூடும். அவையாவன:

- தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் உடல்சார்ந்த தொடர்பு பற்றிய எதிர்பார்ப்புகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. யுகேவில் பொதுவாக மக்கள் பொது இடத்தில் ஒரு வசதியுணர்வை பராமரிக்கும்பொருட்டு சிறிது தனிப்பட்ட சுதந்திரத்திற்கு இடம் தரப்படுவதை எதிர்பார்க்கின்றனர்.
- குறிப்பாக இளைஞர்கள் ஒரு பெரிய குழுவாக ஒன்று திரளும் போது பயமுண்டாக்குவதாக தோன்றக்கூடும்.
- ஐக்கிய ராஜ்ஜியத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரையுமே முகமன் கூறுவதற்கான பொதுவான முறை 'ஹலோ' சொல்வது மற்றும்/அல்லது கைகுலுக்குவதாகும்..

**யு.கே-யில் வாகனம் ஓட்டுதல்**

நீங்கள் யு.கே-யில் புகலிடம் கோரி விண்ணப்பத்திருந்து, இன்னமும் தங்குவதற்கான விடுப்பு பெறவில்லை என்றால், 25 மார்ச் 2010 அன்றைய நிலவரப்படி, இனியும் உங்களால் யுகே ஓட்டுனர் உரிமத்திற்கு விண்ணப்பிக்க முடியாது.
நீங்கள் வாகனம் ஒன்றை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இருந்தால் உங்களிடம் இவை இருக்க வேண்டும்:

- நடப்பிலுள்ள/செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம்
- வாகனத்திற்கான காப்பீடு
- உங்களுடைய வாகனம் பாதுகாப்பானது என சரிபார்க்கப்பட்ட நடப்பிலுள்ள/செல்லத்தக்க MOT சான்றிதழ்
- நடப்பிலுள்ள/ செல்லத்தக்க சாலை வரி

- உங்களிடம் யு.கே-விற்கு வெளியிலுள்ள நாடு ஒன்றிலிருந்து முழுமையாக செல்லுபடியாகின்ற ஓட்டுநர் உரிமம் ஒன்று இருக்குமானால், மேலும் அதற்கான ஆவண அத்தாட்சி உண்டு என்றால், நீங்கள் யு.கே-விற்குள் நுழைந்த தேதியிலிருந்து 12 மாதங்கள் வரை உங்களது வெளிநாட்டு உரிமத்தில் உங்களால் வாகனம் ஓட்ட முடியும்.
- நீங்கள் மது அல்லது போதைப்பொருளை உட்கொண்டிருக்கும் போது வாகனம் ஓட்டினால் நீங்கள் சட்டப்படி நடவடிக்கைக்கு ஆளாகக்கூடும்.

**தொலைக்காட்சி உரிமம்**

- உங்களிடம் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி இருக்குமானால், நீங்கள் தொலைக்காட்சி உரிமம் ஒன்றை வாங்க வேண்டும்
- நீங்கள் ஒரு தொலைக்காட்சி உரிமத்தை **0300 790 6131** என்ற எண்ணை அழைப்பதன் மூலமாகவோ, இணையத்திலோ www.tvlicensing.co.uk அல்லது நேரடியாக இச்சின்னம் காணப்படும் ஏதேனும் ஒரு கடையிலோ வாங்கலாம்.